முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 132/2022

அரசுதரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கர் | வயது | : | 53 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராமு | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 06.11.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் தற்போது காட்டுமன்னார்கோவில் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 18.09.2018 அன்று 1.00 மணியளவில் ஆய்வாளருக்கு உதவியாக நானும், முதல்நிலை காவலர் திரு பூபாலன் அவர்களும் ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி கள்ளிப்படை வெள்ளாற்றில் மணல் திருட்டு சம்பந்தமாக கண்காணித்து சென்ற போது மேற்படி ஆற்றில் இரட்டை டயர் மாட்டு வண்டியுடன் கூடிய 1/4 யூனிட் மணலை ஏற்றி சரி செய்து கொண்டிருந்த ஆஜர் எதிரியை பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் பெயர் தேவேந்திரன் வயத 45 த/பெ. ராமசாமி, கிழக்குத் தெரு, குணமங்களம், ஸ்ரீமுஷ்ணம் தாலுக்கா என்று கூறினார்.

அவர் எவ்வதி அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் கள்ளிப்படை வெள்ளாற்றில் மனித உயிருக்கு பயன்படுத்தும் குடிநீர் வளத்தினை அழிக்கும் விதத்தில் ஆற்று மணலை ஏற்றிய குற்றத்திற்காக 02.05 மணிக்கு காரணம் கூறி ஆய்வாளர் கைது செய்தார். அவ்விடத்தில் அன்னிய சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தினால் நானும், என்னுடன் முதல் நிலை காவலர் 1760 திருபூபாலன் ஆகியோர்கள் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளாக இருக்க வழக்கு சொத்தினை ஆய்வாளர் மகசரில்கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.1** ஆகும். தற்போது எதிரி திரும்ப இடைக்காலப்பொருப்பில் பெற்று சென்ற மாட்டு வண்டியினை தன் வீட்டில் உள்ளதை வீடியோவில் காண்பித்தார். அது **சா.பொ.1.** பின்பு எதிரி தடயம் சகிதம் 3.00 மணிக்கு காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 257/2018, சட்டப்பிரிவுகள் 379, 430 IPC r/w 21(1) Mines and Minerals Act படி வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் 1.00 மணிக்கு கிளம்பினோம். ஆய்வாளர் என்னை விசாரித்த போது 1.00 மணிக்கு ரோந்து பணிக்கு சென்ற விவரத்தினை சொல்லவில்லை.

ரோந்து பணிக்கு சென்ற போது காவல் நிலைய பொருப்பினை யாரிடம் ஒப்படைத்துவிட்டு சென்றோம் என்றால் காவல் நிலைய GD இருப்பார்கள் அவர் யார்எ ன்று தற்போது தெரியவில்லை. காவல் நிலையத்திலிருந்து வெளியே செல்லும் போது பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யவேண்டும் என்றால் ஆமாம். அந்த விவரத்தினை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் தெரியவில்லை. இரகசிய தகவல் எந்த இடத்திலிருந்து வந்தது என்று ஆய்வாளருக்கு தான் தெரியும். நான் ஆய்வாளருடன் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சென்றிருந்தால் இரகசிய தகவல் மற்றும் இடம் பற்றி எனக்குத் தெரிந்திருக்கும் என்றால் ஆய்வாளருக்கு தான் தெரியும். 161(3)கு.வி.மு.ச வாக்குமூலத்தில் வெள்ளாற்றிலிருந்து மணலை கள்ளத்தனமாக ஏற்றியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மணலை ஏற்றுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களை கைப்பற்றினோமா என்றால் உபகரணங்கள் அங்கு காணப்படவில்லை, மணலை ஏற்றிவிட்டு சரி செய்து கொண்டிருந்தார். சரி செய்து கொண்டிருந்ததாக 161(3)கு.வி.மு.ச வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை, டயர் மாட்டு வண்டியில் மணல் ஏற்றிக்கொண்டிருந்தவரை என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் ஆமாம், கள்ளிப்படை வெள்ளாறுக்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 5 கி.மீ உள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றால் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். கள்ளிப்படை ஆற்றின் நீளம் எவ்வளவு தூரம் என்றால் தெரியாது.

கள்ளிப்படையின் ஆற்றின் ஓரமாக தான் பொதுமக்கள் இருசக்கர வாகனத்தில் சென்று வருவார்கள் என்பதால் எப்போதும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி தான் என்றால் ஆமாம். ஆற்றின் பக்கத்தில் நிறைய நிலங்கள் மற்றும் செங்கல் சூலை உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் ,சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்பதும், வழக்கு சொத்து கைப்பற்றவில்லை என்பதும் ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்பதும் சரியல்ல. கண்ணால் பார்த்த சாட்சி என்ற அடிப்படையில் நான் பொதுபணித்துறைக்கு, வட்டாட்சியருக்கு தனிஅறிக்கை அல்லது புகார் அனுப்பினேனா என்றால் இல்லை. புள்ளி விவரக்கணக்கிற்காக ஜோடிக்கப்பட்ட வழக்கிற்கு ஆய்வாளருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும், வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்பதும் சரியல்ல.